DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
DHARMAPURI.

**S.C.No. 38/2025**

| | | |
|---|---|---|
| | } | Prosecution |
| Deposition of P.W. 1 (L.W. 1 ) | } | Defence |
| | } | |
| Name of the Witness | : | **திரு. கோவிந்தன்** |
| Father/Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Religion | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed and sworn in this court, in accordance with provisions of Act X of 1873 on 25.03.2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்)**

**முதல் விசாரணை**

நான் எர்னள்ளி பஞ்சாயத்தில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். ஆட்டு வியபாரம் செய்து வருகிறேன். எர்னள்ளி பஞ்சாயத்தில் கூசுக்கல் கிராமத்தில் 9.5 ஏக்கர் நிலம் என்னுடைய பாட்டிக்கு முத்தப்பா கவுண்டர் கொடுத்தது. என்னுடைய அனுபவத்தில் சொத்து உள்ளது அதில் தான் நான் வீடு கட்டி வசித்து வருகிறேன். சுமார் 1 1/2 வருடங்களுக்கு முன்பு கோவிந்தசாமிக்கு அலெக்ஸ் பாண்டியன் குடும்பத்தாருக்கு 9 1/2 ஏக்கர் நிலத்தை கையெழுத்து போட்டு கொடுத்தார். பின்பு லோக் அதாலத் மூலம் கோவிந்தசாமி சொத்தை எடுத்துக்கொண்டார். மொத்தம் 14 ஏக்கர் நிலத்தில் 4 1/2 ஏக்கர் நிலம் மட்டும் கோவிந்தசாமி எனக்கு எழுதிக்கொடுப்பதாக அழைத்தார். பிறகு நாங்கள் சென்றோம். நான் கோவிந்தன், என் அண்ணன் முருகன், ராமசாமி ஆகியோர்கள் பாலக்கோடு நீதிமன்றத்திற்கு பொன்னுசாமி வர சொன்னார்.

2. கோர்ட் செலவுக்கு ரூபாய் 2 லட்சம் கோவிந்தசாமி எங்களிடமிருந்து வாங்கிக்கொண்டார். 4 1/2 ஏக்கர் நிலத்தை லோக்அதாலத் அவார்டை பத்திர அலுவலகத்தில் கோவிந்தசாமி பதிவு செய்துக்கொடுத்தார். 4 1/2 ஏக்கர் நிலத்தை பதிவு செய்து கொடுத்ததால் அவரை நம்பினேன். மீதி 9 1/2 ஏக்கர் நிலத்தை எனக்கு கொடுத்துவிடுவதாக நான் நம்பினேன். 9 1/2 ஏக்கர் நிலத்தை அவர்

பெயரிலும் இன்னொரு வழக்கறிஞர் பெயரிலும் பதிவு செய்துக்கொண்டார்கள். நிலத்தை அளப்பதற்காக தனியார் சர்வேயருடன் கோவிந்தசாமி வழக்கறிஞர் வந்தார். எனக்கு கொடுத்த 4 1/2 ஏக்கர் நிலத்தை மூளைக்கு மூளை அளந்துக்கொடுத்தார்கள். பிறகு அவசரஅவசரமாக நிலத்தை விற்க ஆரம்பித்தார். நிலத்தை வாங்க வந்தவர் என்னிடம் கேட்டார். 9 1/2 ஏக்கர் நிலத்தை எனக்கு 3 1/2 ஏக்கர் நிலம் சேரவேண்டும். 6 ஏக்கர் நிலத்தையும் எனக்கு சேர வேண்டிய 3 1/2 ஏக்கர் நிலத்தையும் ஒரே நேரத்தில் பத்திரம் செய்துக்கொடுக்கவேண்டும் என்று கூறினேன். ஆனால் எனக்கு தெரியாமல் 6 ஏக்கர் நிலத்தை ரூபாய் 1 கோடிக்கு விற்றுவிட்டார். அலெக்ஸ்பாண்டி குடும்பதினர் 6 ஏக்கர் நிலத்தில் 10 சென்ட் குறைவாக உள்ளதால் என்னிம் 10 சென்ட் நிலத்தை கேட்டார்கள். என்னுடைய 3 1/2 ஏக்கர் நிலத்தில் 10 சென்ட் எடுத்துக்கொள்ளுமாறு கூறிவிட்டேன்.

3. 10 சென்ட் நான் கொடுத்துவிட்டதால் அதனை அளந்து ஸ்கெட்ச் போட்டு விட்டனர். நான் கோவிந்தசாமி வழக்கறிஞரிடம் எனக்கு உண்டான 3 ஏக்கர் 40 சென்ட் நிலத்தை ஆவணம் செய்து கொடுக்குமாறு நான் கேட்டேன். பிறகு கிரையம் செய்யும் போது என்னுடைய 30 சென்ட் நிலத்தையும் சேர்த்து பதிவு செய்துக்கொண்டார்கள். எனக்கு பதிவு செய்து தரும்படி மறுபடியும் கேட்டேன். அவர் செய்துக்கொடுப்பதாக சொன்னார். பத்திர அலுவலகத்தில் நான் சென்று

டோக்கன் போட்டு, ஆவணம் தயார் செய்துவிட்டேன். ஆனால் கோவிந்தசாமி பத்திர அலுவலகத்திற்கு கையெழுத்து போடுவதற்கு அவர் வரவில்லை. நான் அவரிடம் மீண்டும் கேட்டேன். அவர் செய்து தருவதாக கூறினார். பிறகு நான் கோவப்பட்டு போன் மூலம் யாருடைய அப்பன் சொத்தை கிரையம் செய்து கொடுக்கமாட்ரா என்று கேட்டேன் அதற்கு அவர் போனை துண்டித்துவிட்டார். அடுத்து நாள் காலையிலும் போனில் கேட்டேன் செய்து தருவதாக கூறினார்.

4. பிறகு என் வீடு, நிலம் கோவிந்தசாமி பெயரில் தான் உள்ளது. கிரையம் எதுவும் செய்யவில்லை. லோக்அதாலத் மூலம் அவர் பெயரில் தான் உள்ளது. பிறகு அரசு சர்வேயர் வந்தார். நான் ஆட்சேபனை செய்தேன். சிட்டா மாறுவதற்கு தடங்கல் விண்ணப்பம் கொடுத்தேன். நான் எனக்கு ஆவணம் செய்துக்கொடுப்பதாக சொல்லி என் தாத்தா பெயரில் இருந்த சிட்டாவை அவர் பெயரில் மாற்றிக்கொண்டார். அந்த நிலத்தை விற்றுவிட்டு பணம் 1 கோடி ரூபாயை வாங்கி கொண்டார். பிறகு பத்திரம் செய்துக்கொடுக்க சொல்லி நான் கேட்டு அவரிடம் நல்ல முறையில் பேசிக்கொண்டு இருந்தேன்.

5. நான் போன் மூலம் அவரை திட்டியதை மனத்தில் வைத்துக்கொண்டு என்னை கொலை செய்யவதாக பிளான் செய்தார். நான் படிக்கவில்லை அதனால் தேதி தெரியவில்லை. நான் சந்தைக்கு செல்வதற்காக காலை 4 மணிக்கு என்

நிலத்தில் இருந்து மாரண்ட அள்ளிக்கு என்னுடைய இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தேன். அன்று ஞாயிற்றுக்கிழமை எனக்கு பின்னால் ஒரு டெம்போ வந்தது. மண் ரோட்டில் இருந்து வளைந்து மெயின் ரோட்டிற்கு வந்தேன். அப்போது அங்கே ஒரு தோஸ்ட்டு வண்டி நின்றுக்கொண்டிருந்தது அதை பார்த்தேன். நான் 1 1/2 கிலோ மீட்டர் தூரம் போனேன் பின்னாலே அந்த வண்டியும் வந்துக்கொண்டிருந்தது. நான் வேகமாக சென்றால் அந்த வண்டியும் வேகமாகவும், நான் மெதுவாக சென்றால் அந்த வண்டியும் மெதுவாகவும் வந்தது. நான் என்னுடைய வாகனத்தின் சைடு கண்ணாடி மூலம் பார்த்தப்போது என்னுடைய வண்டி அருகே நெருங்கி வந்தது. என்னுடைய வண்டிக்கு அருகில் நெருங்கி வந்துக்கொண்டிருந்தது நான் வேகமாக சென்றேன். நான் சந்தேகம் அடையந்து வண்டியை நிறுத்தலாம் என்று நினைத்தேன். நான் வண்டியை நிறுத்தினேன். அந்த வண்டியும் மெதுவாக நின்றது. அந்த வண்டி தக்காளி ஏற்றுவதற்காக வண்டி வந்தது என்று நினைத்துக்கொண்டு நான் மீண்டும் வண்டிய ஓட்டி சென்றேன். பொப்பிளி தாண்டி ஒரு வளைவில் திரும்பும் போது என் பின்னால் வந்த வாகனம் 20 அடி துாரத்தில் வந்துக்கொண்டிருந்தது. அந்த சமயத்தில் எனக்கு பின்னால் இரு சக்கர வாகனத்தில் எல்மெட் மாட்டிக்கொண்டு வந்தனர். என்னை முந்திக்கொண்டு எதிரில் வந்த வாகனத்தில் போன் மூலம் தகவல் சொல்வதாக

நினைத்துக்கொண்டு சென்றேன் அப்போது எனக்கு முன்னால் ஒரு கார் வேகமாக வந்தது. அந்த காரை பார்த்து நான் பயந்து அருகே உள்ள மண்ரோட்டில் இறங்கிவிட்டேன். கார் என் அருகே வந்து நேராக என் வண்டி மீது மோதிவிட்டது. நான் வண்டியில் இருந்து தூக்கி எறியப்பட்டு கார் கண்ணாடி மீது மோதி விழுந்து பள்ளத்தில் விழுந்துவிட்டேன். பின்னாலே தோஸ்து வண்டியும் வந்தது. காரும் தோஸ்து வண்டியும் ரெண்டும் பக்கம் பக்கமாக வந்து நடுவில் என்னை இடிக்க முயற்சி செய்யப்பட்டது. இரண்டு வண்டியும் மோதிக்கொண்டது. தோஸ்து வண்டியில் ஆரன் சத்தம் கேட்டுக்கொண்டே இருந்தது. எனக்கு இடது பக்கம் தோள்பட்டை இறங்கி விட்டது. என்னை அடிக்க வந்தார்கள் நான் அடிக்க வருகிறார்கள் என்று சொல்லி கூச்சல் போட்டு ஓடினேன். அப்போது கோவிந்தமாமி அவனை அடித்து ஒழிங்கடா என்று சொல்லினார் அப்போது கூச்சல் போடவும் அக்கம் பக்கத்தினர் வந்துவிட்டார்கள். பக்கத்தில் என்னுடைய சித்தப்பா மகன் சசிக்குமாரிடம் ஓடினேன். சசிக்குமாரின் வீட்டிற்கு போனேன். அவர் கதவை தாழ்பாழ் போட்டுக்கொண்டார்கள். கூட்டம் சேர்ந்துக்கொண்டதால் நான் மீண்டும் என் வண்டி இருக்கும் இடத்திற்கு சென்றேன். அங்கு எல்லாரும் ஓடிவிட்டார்கள். தோஸ்து வண்டியை ஓட்டி வந்தவர் ஒருவரின் கால் ஸ்டேரிங் மாட்டிக்கொண்டது. மீதி ஆட்கள் ஓடிவிட்டார்கள். தோஸ்து வண்டியில் இருந்தவரை கிடப்பாரையை

போட்டு அவரின் காலை வெளியே எடுத்தனர். பிறகு என்னுடைய செல்லை தேடி எடுத்தேன் செல்லில் பேலன்ஸ் இல்லை. அங்கு என் சித்தப்பா மகனிடம் போன் செய்து கொடுடா என்று கேட்டேன் அவர் வேறு ஒரு செல்லில் போன் செய்து கொடுத்தார். நான் என் மனைவியையும் மகனையும் அந்த இடத்திற்கு வர சொன்னேன். அவர்கள் வந்தார்கள். ஆம்பலன்ஸ்க்கு போன் செய்து. அங்கு ஆம்லன்ஸ் வந்தது. காயம் ஏற்பட்ட அந்த நபரையும் நானும் பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு சென்றோம். பிறகு காரில் இருந்து கோவிந்தசாமியின் 2 செல்போனை நான் எடுத்து போலீசாரிடம் கொடுத்துவிட்டேன். பிறகு 3 நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்து எழுதிக்கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ–1**. சாட்சி 1ம் எதிரியை (கோவிந்தசாமி) அடையாளம் காட்டினார். சாட்சி 2ம் எதிரியை(கார்த்திக்கை) காட்டி தோஸ்து வண்டி ஓட்டி வந்தார் என்று அடையாளம் காட்டினார். சாட்சி 3ம் எதிரியை (ரவி) காரை ஓட்டி வந்ததாக என்று அடையாளம் காட்டினார். சாட்சி 4ம் எதிரியை (கோவிந்தராஜ்) காரின் முன்னால் உட்கார்ந்து வந்ததாக கூறினார். சாட்சி 5ம் எதிரியை(அரவிந்த்) இருசக்கர வாகனத்தை ஓட்டி

வந்ததாக என்று அடையாளம் காட்டினார். 7 ம் எதிரி (கோபி) காரின் வழக்கறிஞரிடம் உட்கார்ந்து வந்ததாகவும் என்று அடையாளம் காட்டினார்.

**1, 3, 4, 6 எதிரிகள் தரப்பில் வாய்பளித்தும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**2, 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. என்னுடைய தாத்தா பெயர் தாதப்பன். என் தாத்தாவிற்கு மூன்று மனைவிகள். பாலக்கோட்டிற்கும் நான் குடியிருக்கும் வீட்டிற்கும் 4 கிலோமீட்டர் துாரம் இருக்கும். குசுங்கு சாமி மேட்டில் குடியிருக்கிறேன். 9 ஏக்கர் நிலத்தை என் பாட்டிக்கு முத்தப்பனுக்கு கொடுத்தது பொய் என்றால் சரியல்ல. அந்த 9 ஏக்கர் நிலத்தை நான் போலீசாரிடம் கொடுக்கவில்லை. என்னிடம் தான் உள்ளது. 9 ஏக்கர் நிலம் என்னுடைய அனுபவத்தில் தான் உள்ளது என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1 1/2 வருடங்களுக்கு முன்பு அலெக்ஸ் குடும்பதாருக்கு வழக்கறிஞர் கோவிந்தாமிக்கு கையெழுத்து போட்டுக்கொடுத்து ஆவணம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. அந்த சொத்தின் சர்வே எண் 385, 386 ஆகும். 14

ஏக்கர் நிலத்தை 4 1/2 ஏக்கர் நிலத்தை எழுதிக்கொடுப்பதாக கோவிந்தசாமி என்னை கூப்பிட்டார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் அடிக்கடி கோவிந்தசாமி ஆபிஸ்க்கு போனதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எந்த தேதியில் போனேன் என்றால் நான் எழுத படிக்க தெரியாததால் எனக்கு தெரியவில்லை. நான் என் அண்ணன், என் தம்பி, என் தங்கச்சி எல்லோரும் போனோம். இந்த விவரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் பத்திர அலுவலகத்திற்கு எந்த தேதியில் போனேன் என்று எனக்கு ஞாபகம் தெரியாது. நான் பத்திர அலுவலகத்திற்கு போனதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவரின் ஆதார் கார்டு என்னிடம் கொடுத்தார். டோக்கனின் நெம்பர் எனக்கு தெரியாது. நான் டோக்கனை எதுவுமே போடவில்லை என்பதால் தான் டோக்கன் நெம்பரை போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனக்கு வழக்கறிஞர் கோவிந்தசாமி எந்த ஆவணமும் எழுதிக்கொடுப்பதாக சொல்லவில்லை என்று சொன்னாலும் நான் பத்திர அலுவலகத்திற்கு போகவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

2. நான் போலீஸ் விசாரணையில் அலெக்ஸ் பாண்டியன் வழக்கு போட்டு இருப்பதாக கோவிந்த சாமி வழக்கறிஞர் என்னிடம் சொன்னதை நான் சொல்லியிருக்கிறேன். அது என்ன வழக்கு, அது எந்த நீதிமன்றத்தில் உள்ளது என்ற விவரத்தை தெரிந்துக்கொள்ள நான் எந்த முயற்சியும் எடுக்கவில்லை. கோவிந்தசாமி வழக்கறிஞர் என்னிடம் அலெக்ஸ் பாண்டியன் என் மீது வழக்கு போட்டு இருப்பதாக என்னிடம் சொல்லவில்லை என்றாலும் அது போல எந்த வழக்கும் நீதிமன்றத்தில் நிலுவையில் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல.

3. நான் சந்தைக்கு போகும்போது பணம் எதுவும் எடுத்துபோகவில்லை. நான் அன்றைய தினம் ஆட்டை வண்டியில் ஏற்றி செல்லவில்லை. நான் போலீஸாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். அந்த புகார் வாக்குமூலம் எப்போது எந்த தேதியில் கொடுத்தேன், எத்தனை பக்கம் உள்ளது என்றால் எனக்கு படிக்க தெரியாததால் எனக்கு தெரியாது. அந்த புகார் வாக்குமூலத்தை நான் படிக்கவில்லை. போலீஸார் என்னிடம் சிலவற்றை படித்து காண்பித்தார்கள் சிலதை படித்து காண்பிக்கவில்லை. என்னுடைய புகார் வாக்குமூலத்தில் உள்ள அனைத்து சங்கதிகளும் முழுமையாக

தெரியுமா என்றால்  எனக்கு தெரியாது. எழுத படிக்க தெரியாததால் எனக்கு தெரியாது. புகார் வாக்குமூலத்தில் எத்தனை கையெழுத்து போட்டேன் என்றால் எனக்கு தெரியாது.

4. நான் ஓட்டி சென்ற வண்டி விக்டர் வண்டி நெம்பர் தெரியாது. அந்த வண்டி என்னுடைய வண்டி என்பதற்கு நான் ஆவணம் எதுவும் கொடுக்கவில்லை போலீசார் என்னிடம் கேட்கவில்லை. வாகனங்கள் என்னை துரத்தி வந்தபோது நேரம் காலை 4.30 மணி. அப்போது சுமாராக இருட்டாக இருந்தது. இருட்டாக இருந்ததால் என் பின்னால் வந்த வாகனத்தில் யார் இருக்கிறார்கள் என்று என்னால் பார்க்க முடியாது என்றால் சரிதான். கிட்டக்கா வந்தபோது நான் பார்த்தேன். நான் கிட்டக்கா பார்த்தாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் அன்றைய தினம் 40 கிலோமீட்டர் துாரத்தில் சென்றேன். சாலையின் மேற்கு பக்கம் உள்ள மண் ரோட்டில் விழுந்துவிட்டேன். அதுப்போல மேற்கு பக்கம் விழுந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. பொல்லிக்கவுண்டர் நிலம் எந்தப்பக்கம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

5. பொப்பிடி கிராமத்தை தாண்டி அந்த ஊரின் எல்லையில் மாரண்ட அள்ளி நோக்கி செல்லும் தார் சாலை ஒரு L மாதிரி வளைவு உள்ளதா என்றால் ஒரு வளைவு உள்ளது. மாரண்ட அள்ளி காவல் உதவி ஆய்வாளர் முருகனை எனக்கு தெரியும். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும் எதிரிகளுக்கும் உங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் எதிரிகளை சம்பவ இடத்தில் பார்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>7ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

6. போலீஸார் இந்த வழக்கில் எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் இரண்டு முறை விசாரித்தார்கள். நான் 7 எதிரியை பற்றி போலீசார் என்னிடம் 2 முறை விசாரிக்கும் போது சொல்லவில்லை என்றால் எனக்கு பெயர் தெரியவில்லை. நிலம் 14 1/2 ஏக்கர் என்னுடைய சுவாதீனத்தில் தான் உள்ளது. நிலத்தின் பத்திரம் என்னுடைய பாட்டியின் அப்பா பெயரில் உள்ளது. 14 1/2 ஏக்கர் நிலத்தை எங்கள் பங்கு தான் உள்ளது வேறு யாருக்கும் இல்லை. அந்த சொத்தில் என் சித்தப்பாவிற்கும் எனக்கும்

உள்ளது. சொத்து முழுவதும் என்னுடைய சுவாதீனத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். இந்த நிலம் சம்மந்தமாக ஒருவரை தாக்கி காயப்படுத்தியதாக ஒரு வழக்கு இருந்ததாகவும் அந்த வழக்கில் எனக்கு தண்டனை கொடுத்தார்கள் என்றாலும் அந்த வழக்கு மேல்முறையீட்டில் நிலுவையில் உள்ளது என்றாலும் சரிதான்.

7. சொத்தின் உரிமையாளர் சண்முக என்பவரை கொலை செய்ததாக என் பெயரில் வழக்கு உள்ளது என்றால் சரிதான். சொத்தை என்னை ஏமாற்றிவிட்டதாக விசில் வழக்கு எதுவும் போடவில்லை. காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. கலெக்டரிடம் மனு கொடுத்தேன். நான் சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் என்னுடைய நீதிமன்ற சாட்சியத்தில் சொல்லியுள்ள முதல் இரண்டு பக்கத்தில் உள்ள சங்கதிகள் நான் போலீஸ் வாக்குமூலத்திலும் புகாரிலும் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ள புகார் மற்றும் போலீஸார் சொல்லியுள்ள விவரத்திலும் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. நான் 7 ம் எதிரியை 1

எதிரியின் அலுவலகத்தில் பார்த்ததாக என்னுடைய புகாரிலும் போலீஸ் விசாரணையிலும் முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் 7ம் எதிரியை பார்க்கவே இல்லை என்பதால் தான் பின்னிட்டு கொடுக்கப்பட்ட புகாரிலும் போலீஸ் விசாரணையிலும் முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனக்கு 7ம் எதிரியை யார் என்றே தெரியாததால் தான் அவரை நான் எங்கையுமே சொல்லவில்லை என்றால் சரியல்ல.

8. அதிகாலை இருட்டாக இருக்கும் என்பதால் பின்னாலில் இருக்கும் வாகனத்தில் இருப்பது யார் என்றே தெரியாது என்றால் சரியல்ல. என்னை தாக்கியவுடன் காரின் மீது காரின் முன் கண்ணாடி மீது விழுந்து எழுந்து என் சித்தப்பா மகன் சசிக்குமாரின் வீட்டிற்கு சென்று விவரத்தை சொல்லி கதவை மூடிக்கொண்டதாக சொல்லியுள்ளது போலீஸார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் காரின் மீது மோதி கீழே விழுந்து எழுந்துபோய் என் சித்தப்பா வீட்டிற்கு திரும்ப வந்து என்னுடைய செல்போனை தேடியதாக சொல்லியிருப்பதால் எனக்கு காயமே ஏற்படவில்லை நான் ஆம்பலன்ஸில் மருத்துவமனைக்கு போக வில்லை

என்றால் சரியல்ல. நான் 2 செல்போன்களை எடுத்து வைத்துக்கொண்டு அதை போலீஸாரின் கொடுத்து அதை அவர்கள் DSP யிடம் கொடுத்துவிட்டார்கள் என்று புகாரிலும், போலீஸார் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் செல்போனை எடுக்கவில்லை என்பதால் தான் போலீஸார் விசாரணையில் எடுத்து கூறியதாக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

9.விபத்து தான் நடந்தது என்பதாலும் அதை பயன்படுத்தி 1ம் எதிரியிடம் இருந்த சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதால் 1ம் எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்து 7 ம் எதிரியும் சேர்த்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 7 ம் எதிரியை நான் பார்க்கவே இல்லை என்பதால் தான் என்னுடைய புகாரிலும் போலீஸ் விசாரணையிலும் அவரைபற்றி எதுவுமே சொல்லாமல் பொய்யாக என்னுடைய முதல் விசாரணையில் 7ம் எதிரி காரில் உட்கார்ந்து கொண்டு வந்தார் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

10. 1 ம் எதிரியும் 7 ம் எதிரியும் ஆய்வாளர் மீது மனித உரிமை ஆணையத்தில் புகார் கொடுத்ததால் அவர்களை பலி வாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஏற்கனவே இரண்டு வழக்குகள் என் மீது இருப்பதால்

ஆய்வாளருக்கு ஆதரவாக பொய்யாக வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் அனைவரும் சட்டம் படித்தவர்கள் என்பதால் அவர்கள் குறுக்கு வழியில் ஆதாயம் தேடவேண்டும் என்பதற்காக நான் பொய்யாக இந்த வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

Sd/Tmt.U.Monica,M.L.,
Additional District Judge,
Dharmapuri.